**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS <u>173/2021</u>**

**<u>14.07.2026</u>**

**<u>PW- 1</u>**

**<u>வா.சா.1. மாதவி, க/பெ.குமாரசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

எனது அப்பா பெயரில் உள்ள சொத்திற்கு பாகம் கேட்கிறேனா அல்லது அம்மா பெயரில் உள்ள சொத்திற்கு பாகம் கேட்கிறேனா என்றால் - அப்பா பெயரில் உள்ள சொத்திற்கு பாகம் கேட்கிறேன். என் அப்பாவிற்கு இந்த வழக்கு சொத்து சொந்தம் என்பதை காட்டுவதற்கு சிட்டாவை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் - சரிதான். அதுபோல கிரைய பத்திரங்கள் எதுவும் இல்லை என்றால் - சரிதான். என் அப்பா எனது திருமணத்திற்கு முன்பே 09.09.1989 ல் இறந்துவிட்டார் என்றால் - சரிதான். அவர் இறந்துபோய் 5 வருடங்கள் கழித்துதான் எனது திருமணம் 1993 ல் நடந்தது என்றால் - சரிதான். எனது திருமணத்திற்கு முன்பு எனது குடும்ப சொத்து விற்கப்பட்டதா என்றால் - ஆமாம். அந்த சொத்தானது எனது அம்மா பெயரில் உள்ள சொத்து என்றால் - சரியல்ல. என் அப்பா பெயரில் தான் இருந்தது. அந்த பணத்தை தான் எனது திருமணத்திற்காக எனது பாகம் என்று கொடுக்கப்பட்டது என்றால் - சரியல்ல. பணம் கொடுத்தார்கள். எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று நினைவில்லை. என் அப்பா இறப்பதற்கு முன்பு என் அப்பா பெயரில் சொத்தானது இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். 2019 ல் ஏற்பட்ட ஆவணம் தான் நான் தாக்கல் செய்துள்ள சிட்டா என்றால் - சரிதான். 2019 ல் எனது தகப்பனார் உயிரோடு இல்லை என்பதால் வாரிசு என்ற அடிப்படையில் எனது பெயரிலோ பிரதிவாதி பெயரிலோ கூட்டுப்பட்டா எதுவும் பதிவாகவில்லை என்றால் - சரியல்ல. உண்மையிலோ தாவா சொத்து எனது அப்பா பெயரில் இருந்திருந்தால் என் அப்பா இறந்தபிறகு எனது பெயரிலும் பிரதிவாதி பெயரிலும் கூட்டுப்பட்டா பதிவாகியிருக்கும் என்றால் - சரியல்ல. 2019 ல் தாவா சொத்து சம்மந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் - சரிதான். அந்த பஞ்சாயத்தில் எனக்கு பாகம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டது என்பதால் எனக்குபாகம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள் என்றால் - சரியல்ல. பஞ்சாயத்தில் பாகம் தருவதாக சொன்னார்கள். அம்மா இறந்தவுடன் பாகம் தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவ்வாறு பஞ்சாயத்தில் பாகம் தருவதாக சொல்லவில்லை என்றால் - சரியல்ல. தாவா சொத்தானது எனது அண்ணன் பிரதிவாதி கோவிந்தராஜின் தனிப்பட்ட சொத்து என்றால் - சரியல்ல. வருவாய் துறை கணக்கில் தவறாக எனது அப்பா பெயரில் பதிவாகிவிட்டது என்பதால் அதனை மாற்றுவதற்கு மனு கொடுத்து அது நிலுவையில் இருந்துவருகிறது என்றால் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்கள் எனக்கு உரிமைத்தரக்கூடிய ஆவணங்கள் இல்லை என்பதாலும் சொத்து எனது அப்பாவிற்கு சொந்தமானது என்பதாலும் எனக்குஎந்த பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல. எனது அப்பா பெயரில் உள்ள பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். சிவசாமி மகன் ராமசாமியிடமிருந்து என் அப்பா சொத்து வாங்கினார். எந்த வருடம் என் அப்பா கிரயம்

வாங்கினார் என்று நினைவில்லை. மேற்கண்ட விவரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் -சரிதான். அந்த பத்திரத்தை பிரதிவாதி ஒப்படைக்க வேண்டும் என்று கூறி நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் - சரிதான். அப்பா சொத்து என்று சொன்னால் தான் எனக்கு பாகம் கிடைக்கும் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. எனது அப்பா 1989 ல் இறந்துவிட்டதால் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பாகமும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.